**செ.வெ.எண்.122/2018** **நாள்: 20.03.2018**

## செய்தி குறிப்பு

காஞ்சிபுரம் மாவட்டத்தில், தமிழ்நாடு குடியிருப்பு குழு தொடர் ஆய்வு மிக சிறப்பாக நடத்திடும் பொருட்டு, முதன்மை செயலர் மற்றும் ஆணையர், பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை, சென்னை மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் ஆலோசனைப்படி சென்னை மண்டலத்தில் உள்ள மாவட்டங்களான காஞ்சிபுரம், வேலூர், திருவள்ளூர் ஆகியவற்றுக்கு சென்னை மண்டல புள்ளிஇயல் இணை இயக்குநா, மாவட்ட புள்ளிஇயல் துணை இயக்குநர் அவர்கள் தலைமையில் மற்றும் MIDS (Madras Institute of Development Studies) மற்றும் Survey Research Centre, Mitchigan University,USA அலுவலர்களால் 22.01.2018 முதல் 24.01.2018 வரை பயிற்சி அளிக்கப்பட்டது.

அப்போது இந்த ஆய்வு குறித்து சென்னை மண்டல புள்ளிஇயல் இணை இயக்குநர் அவர்கள் கூறியது. “தமிழ்நாடு அரசின் ஆணைப்படி திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு செயல்பாடு துறை, MIDS (Madras Institute of Development Studies) மற்றும் Survey Research Centre, Mitchigan University,USA ஆகியவற்றுடன் இணைந்து தமிழ்நாடு குடியிருப்பு குழு தொடர் ஆய்வு (Tamil Nadu Household Panel Survey) பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறையால் தமிழ்நாடு முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்பட உள்ளது. இந்த ஆய்வு தொடர்ந்து 8 வருடங்களுக்கு எதேச்சை முறையில் தேர்விடப்பட்ட குடியிருப்புகளில் 2 வருட இடைவெளியில் நடத்தப்பட உள்ளது. இதன் மூலம் குடியிருப்பு மற்றும் தனி நபர் ஆகியவற்றில் ஒவ்வொரு வருடமும் ஏற்படும் சமூக பொருளாதார மாற்றங்கள், வருமானம், செலவுகள் மற்றும் வாழ்க்கைத் தரம் ஆகியவற்றில் ஏற்படும் மாற்றங்கள் கணக்கிடப்படும்”..

காஞ்சிபுரம் மாவட்டத்தில், முதல் கட்ட ஆய்வாக, எதேச்சை முறையில் தேர்விடப்பட்ட மொத்தம் 25 நகர்ப்புறம் மற்றும் 20 கிராமப்புறப் பகுதிகளில் சுமார் 7714 குடியிருப்பு வீடுகளில், வீட்டு பட்டியல் படுத்தும் வினாக்களை கொண்டு குடியிருப்பு வீடுகளில், வீட்டு பட்டியல் படுத்தும் வினாக்களை கொண்டு குடியிருப்பில் உள்ள அடிப்படை வசதிகள், கல்வி, வேலைவாய்ப்பு, குடும்பத் தொழில், வாழ்க்கை ஸ்திரத்தன்மை, குடும்ப வருமானம் மற்றும் செலவுகள், விவசாயம், சமூகத் தொடர்பு, மருத்துவம் ஆகியவற்றை அறிந்து கொள்ளப்படுகிறது. இந்த ஆய்வில் முக்கியமாக சமூக அளவில் பின்தங்கிய (SC/ST) மக்களின் சமூக பொருளாதார நிலை பற்றி கணக்கீடப்படுகிறது.

இரண்டாவது கட்டமாக ஏற்றகனவே எடுக்கப்பட்ட குடியிருப்பு வீட்டுப் பட்டியலிலிருந்து, குடியிருப்பின் சமூகப் பிரிவு மற்றும் வருமான குறியீட்டினை அடிப்படையாக கொண்டு 10-12 குடியிருப்புகள் தேர்விடப்பட்டு, 2 வருட இடைவெளியில் தொடர்ந்து 8 வருடங்களுக்கு ஆய்வு மேற்கொள்ளப்பட உள்ளது. இதன் மூலம் இந்த குறிப்பிட்ட குடியிருப்புகள் மற்றும் தனியர் (Individual .ஆகியவற்றில் ஏற்படும் சமூக பொருளாதார மாற்றங்கள், தொழிலில் ஏற்படும் மாற்றங்கள், விவசாயத்தில் ஏற்படும் தொழில் நுட்ப மாற்றங்கள், குடும்ப / தனிநபர் வருமானத்தில் ஏற்படும் மாற்றங்கள், கல்வி மற்றும் மருத்துவ பயண்பாட்டில் ஏற்படும் மாற்றங்கள், ஸ்திரத்தன்மையில் ஏற்படும் மாற்றங்கள், சமூக அந்தஸ்து மற்றும் குடும்ப வருமானத்தை அதிகரிக்க பயன்படுத்தும் தொழில் நுட்ப காரணிகள் ஆகியவற்றை அறிந்துகொள்ளலாம்.. என்று கூறினார். மேலும், பொதுமக்கள் நலனுக்காக எடுக்கப்படும் இக்கணக்கெடுப்பிற்கு உரிய ஒத்துழைப்பு நல்குமாறும், அரசு அலுவலர்கள் கேட்கும் கேள்விகளுக்கான சரியான விவரங்களை கொடுத்து நமக்கும், அரசாங்கத்திற்கும் நல்ல திட்டங்களை வகுத்திட உதவிடுமாறும் வேண்டுகோள் விடுத்தார்.